ஹரிஓம்.

ஸ்ரீமதேராமாநுஜாயநம:

ஸ்ரீமந்நிகமாந்தமஹாகுரவேநம:

# கோயிலந்தாதி.

திருவரங்கம்பெரியகோயில்
ஸ்ரீமத் உபயவேதாந்தகோமடம்
ஸ்ரீநிவாஸஐயங்காரென்னும்
பாலகவியவர்களியற்றியது.

இஃது,
சென்னைக் கவனர்மெண்டு
நார்மல்ஸ்கூல்
தமிழ்த்தலைமைப்புலவராகிய
கோ - இராசகோபாலபிள்ளை
அவர்களால் பார்வையிடப்பட்டு

ஷை யூர் மேஸர்ஸ்-டீ-ஜே-டைம்ஸ்-கார்ட்லாட்
அண்டுகோ அவுசில் - துபாசியாகிய
ம-ா-ா-ஸ்ரீ, லாலாப்பேட்டை
கோவிந்தராஜமுதலியாரவர்கள்
பேருதவியால்
புங்கத்தூர்
ம சபாபதிமுதலியாரது
கல்விவிளக்க அச்சுக்கூடத்திற்
பதிப்பிக்கப்பட்டது.

பிரமோதூதஸு ஆனிமீ.

ஸ்ரீமத்பராங்குசாயநம:

# சாத்துக்கவிகள்.

## மதுரை - அரங்கநாதபாரதியவர்களியற்றியது.

கட்டளைக்கலித்துறை.

கந்தந்தருமந்தநாகேந்துப்பொய்கைகமழ்திருவே
குந்தந்தருமந்தடாவாமரங்கன்குளாசழற்கி
சைந்தந்தருமந்தத்திடேறப்பாலன்றனக்கருளு
வுந்தந்தருமந்தவந்தாதிசூட்டவுவந்தனனே.

## புரசை - அஷ்டாவதானம் சபாபதிமுதலியாரவர்களியற்றிய.

கழிநெடில்விருத்தம்.

திளைத்தனந்தந்தருள்புரிநம்பெருமாள்சந்நிதிப்பணியினிலை
த்துநல்ல, வளைத்தனன்பிற்கொளும்பாலகவிசீனிவாசமாமறைவ
ல்லாளன், இளைத்தனந்தமுநிவர்துதியரங்கன்மலர்ப்பதத்திடைவ
ண்டிசைத்தேனென்ன, உளைத்தனன்பொற்றிருக்கோயிலந்தாதித
மிழ்ப்புலவருவப்பமாதோ.

இதுவுமது.

அருத்தியிற்பாலகவிசீனிவாசவந்தணனுளைத்தசொற்பொரு
ட்சீர், விருத்திநீடினியகோயிலந்தாதிவியந்தனர்கவிவலோர்களிப்
பத், தருத்திகழ்கொடைத்தாமோதரவள்ளல்தந்தகோவிந்தராஜே
ந்திரன், திருத்திகூரச்சிற்பதித்துநல்லிசையுந்திசைதொறும்பதித்
துநல்கினனே.

## சென்னைக் கவர்ன்மெண்டு
## போதனாசக்திவிர்த்திக் கல்விச்சாலையென்னும்
## நார்மல்ஸ்கூல் தமிழ்த்தலைமைப்புலவர்
## கோ - இராசகோபாலபிள்ளையவர்கள்செய்தது.

எண்சீர்க்கழிநெடில்ஆசிரியவிருத்தம்.

சொற்பொலிவுபொருட்பொலிவுசெறித்துநுட்பந்
துளக்கமிதிட்பத்தமைத்தான்றூநீர்ப்பொன்னி

இற்பொலிதிருக்கோயின்மீதந்தாதி
யிசைகெழுநுல்பாலகவியென்னுஞ்சீர்த்தி
விற்பொலிநஞ்சீநிவாசப்பேர்ச்சீர்சால்
வேதியர்கோனதைலாலாப்பேட்டைவந்த
மற்பொலிதோட்சோவிந்தராசவள்ளன்
மலிவித்தானச்சியற்றிப்பொலிவித்தானே.

## திரிசிரபுரம்-இலக்கணம்-ஆறுமுகப்பிள்ளையவர்கள்

இயற்றியது - எண்சீர்க்கழிநெடில்ஆசிரியவிருத்தம்.

பார்மேவுபல்லுயிர்க்குமெளிதேவீட்டின் பயன்பயக்குந்திருவரங்கப்பதிக்கண்வாழுங்,கார்மேவுந்திருமேனியரங்கநாதன் கமலபதயுகமலரிற்கசிந்தன்பூறிச்,சீர்மேவுமியற்றமிழந்தாதிமாலை செய்தணிந்தான்வாலகவிச்சிங்கங்கஞ்சத், தார்மேவுஞ்சிநிவாசய்யங்காரத் தனிமுதலின்கருணைமிகத்தழைப்பர்மாதோ.

## உறையூர்-முத்துவீரவுபாத்தியாயரவர்களியற்றியது.

கட்டளைக்கலித்துறை.

தேகத்தனத்தங்களந்தோருநான்மறைச்செல்வருமெய்
பூகத்தனத்தனெனப்புகழ்பாலகவிபுமையாள்
பாகத்தனத்தன்பரவிடக்கோயிற்பதியமர்ந்த
ஏகத்தனத்தனந்தாதியொன்றூர்வத்திசைத்தனனே.

## திரிசிரபுரம்-சோமசுந்தரமுதலியாரவர்களியற்றியது.

கட்டளைக்கலித்துறை.

தருவரங்காவென்றிமையோரிறைஞ்சத்தனியடியார்
கருவரங்காவென்றுகைதொழுதேத்தக்கருணைசெய்யுத்
திருவரங்காவென்றொருநூற்றந்தாதிநற்சீர்புனைந்தான்
அருவரங்காவென்றனும்பாலபாரதியந்தணனே.

## ஷையார்மாணுக்கர் மதுரைநாயகமுதலியார்.

கட்டளைக்கலித்துறை.

திருமாதருங்கடைக்கண்டருஞ்செல்வமுந்தேக்குறுஞ்சீர்
வருமாதருங்கடைக்கண்டேமயல்செயவானகத்த
மருமாதருங்கடைக்கண்ணுரும்பாலகவிவனைந்த
ஒருமாதருங்கடைக்கண்ணரந்தாதியையோதுமினே.

## திரிசிரபுரம்-சாமிநாதப்பத்தரவர்களியற்றியது.

யமகக்கட்டளைக்கலித்துறை.

பூப்படப்பன்னகத்தின்மேயநாயகன்பொற்பொதுவர்
பூப்படப்பன்னகத்தின்னொளித்தோர்க்கொருநூற்புகன்றுஞ்
பூப்படப்பன்னகத்தின்பாலநற்கவிபோற்றுவர்க்குப்
பூப்படப்பன்னகத்தின்வழியாமடம்போதற்குமே.

## உறையூர் - விஜயரங்கபிள்ளையவர்களியற்றியது

கட்டளைக்கலித்துறை.

காலந்தரம்படுமால்வினையாவுங்கழிந்தொழியு
மேலந்தரம்படும்விண்ணவராவர்விமலனரு
ளாலந்தரம்படுமால்வாலகேசரியாரறைந்த
மாலந்தரம்படுமந்தாதிகேட்பவர்வையகத்தே.

## ஷ உபாத்தியாயர் மாணாக்கர் இராமலிங்கபிள்ளை.

கட்டளைக்கலித்துறை.

இருக்கந்தரங்கப்பொருளாயினோன்பொன்னியீறில்வளம்
பெருக்கந்தரங்கப்பெருமானமரர்பிரான்சரணக்
குருக்கந்தரங்கப்புகழ்பாலபாரதியோதுகவி
வருக்கந்தரங்கப்பவக்கடனீந்தவரிப்புணையே.

## ஷ உபாத்தியாயர் மாணாக்கர் கோவிந்தசாமிபிள்ளை.

கட்டளைக்கலித்துறை.

பூவணந்தத்தந்திகழ்சீரிடைத்திருப்பொற்புரத்துந்
தாவணந்தத்தந்திகழரங்கேசரந்தாதியெனப்
பாவணந்தத்தந்திகழ்தரப்பாலகவிபுனைந்தான்
றீவணந்தத்தந்திகழுமஃதியார்க்குந்திருத்தருமே.

## ஷ இலக்கணம் ஆறுமுகம்பிள்ளைகுமாரர்

அறுசீர்க்கழிநெடில் ஆசிரியவிருத்தம்.

இருள்காட்டுமருளோட்டுமிகபரமென்றிரண்டினிலுமின்பநல்குஞ், அருள்காட்டுமணிமதில்சூழ்திருவரங்கத்தருமருந்தையகக்கணீங்காத், தெருள்காட்டும்பாலகவிசீனிவாசய்யங்கார்செய்தஞானப், பொருள்காட்டுமினியதமிழந்தாதிக்கவிநூறும் புகல்வோர்கம்மா.



ஸ்ரீமதேராமாநுஜாயநம :

ஸ்ரீமந்நிகமாந்தமஹாகுருவேநம :

# கோயிலந்தாதி.

## நான்முகம்.

### பூமகள், மாமகள், நாமகள்.

கஞ்சங்கலந்தங்குசந்துசசம்பாழிகட்கம்விற்குந்
தஞ்சங்கலந்தங்குதாளரங்கேசனந்தாதிசெய்ய
நெஞ்சங்கலந்தங்குமாவாணிநீங்கணின்றுலெவைக்கும்
அஞ்சங்கலந்தங்குணம்போற்றலன்றிமற்றுணையுமே. (க)

### கருடன், அநுமான், சேனைக்கோன்.

மித்திருபாலனமாயயற்கேமறைவிண்டசுர
சத்திருபாலனமுன்னுவரங்கனந்தாதிவிள்ளக்
கத்திருபாலனஞ்சாவாரசனனற்கான்மகன்மே
கத்திருபாலனந்தஞ்சேனைக்கோன்வந்துகாப்பவரோ. (உ)

### ஆழ்வார்.

முந்தவந்தாதிக்குருவாமரங்கன்முகத்துணைசெய்
இந்தவந்தாதிக்குக்காப்பெனநாடினனெண்ணித்திரு
வந்தவந்தாதிக்குவேறிலையேவகுளாபரண
பந்தவந்தாதிக்குகுசமென்றுன்பதமெனக்கே. (ங)

## ஸ்ரீபாஷ்யகாரர்.

கஞ்சக்கரங்களைக்கண்முகங்காலுந்திகண்டயனார்
நஞ்சக்கரங்களைப்பூப்பெயரங்கரந்தாதிநல்கும்
வஞ்சக்கரங்களைத்தோடத்துவைதமகரிக்கொரு
செஞ்சக்கரங்களைக்கொள்ளெதிராசன்றிருப்பதமே. (௪)

## வேதாந்ததேசிகர்.

செக்கச்சிவந்தனையாமாகுகேள்வன்றிருவரங்கன்
மிக்கச்சிவந்தனையார்க்குஞ்செய்வான்மெய்யந்தாதிசொல்வி
யக்கச்சிவந்தனையாம்புன்மதங்களடக்கிச்செழிப்
பக்கச்சிவந்தனையாநிகமாந்தபரகுருவே. (௫)

## ஆசாரியர்.

நாத்தகஞ்சங்கமரிகுந்தஞ்சார்ங்கநடாத்துநறை
ஆர்ந்தகஞ்சங்கழற்றென்னரங்கேசனந்தாதிசொல்லத்
தேந்தகஞ்சங்கப்பதனெங்குருவாச்சிறந்திடுவே
தாந்தகஞ்சங்கனைமாதவமாமுனிதாட்டுணையே. (௬)

## அவையடக்கம்.

நல்லவனஞ்சலந்தள்ளிநன்பால்கொணயமெனத்தாட்
பல்லவனஞ்சலநம்பெருமாள்பற்றந்தாதியுள்ளின்
சொல்லவனஞ்சலம்போங்கவியோர்தொல்லிலக்கணநூல்
வல்லவனஞ்சலந்தேர்ந்தோர்குணங்கொள்வர்மாசைவிட்டே. (௭)

# கோயிலந்தாதி.

## நூல்.

பொன்னரங்காவரந்தந்திமையோர்தவர்பூண்பணகர்
அன்னரங்காவரதின்னடித்தாமரையாதரித்துப்
பன்னரங்காவரன்பாலிடர்தீர்த்திடும்பான்மையகத்
தின்னரங்காவரம்பில்லாவென்றீவினைதீர்த்திடவே. (௧)

தீரக்கவந்தனைச்செற்றுமுன்னீசன்சிரங்கையில்வந்
தூரக்கவந்தனைவேதனையோச்சரங்காவெகுவாச்
சாரக்கவந்தனைபோலேஞ்சரமத்துத்தாங்கவொண்ணு
தாரக்கவந்தனைத்தீர்கதிவேறெனக்காரத்தனே. (௨)

ஆரத்தவஞ்சலியாமற்செய்வோரண்டரக்கரயன்
ஆரத்தவஞ்சலியாதரித்தாளரங்காவெனகந்
தீரத்தவஞ்சலியாவாளாச்சிந்தைசெய்யாதுபொன்னித்
தீரத்தவஞ்சலியாதேதெனவருள்செல்வமுற்றே. (௩)

உற்றவர்த்தனைப்பொன்னனையட்டவுருக்குமணி
பெற்றவரத்தனையென்னரங்கேசனைப்பேர்குணங்கள்
கற்றவரத்தனைபேருங்கதிசெலக்கண்டுபுலன்
செற்றவரத்தனையாவிக்கென்றேசிந்தைசெய்மனனே. (௪)

செய்யாளிருக்குமறையேத்தரங்கரின்சேர்வையென்றும்
கய்யாளிருக்குமிடந்தேடிவந்துன்கருணைசெய்வாய்
வய்யாளிருக்குமணியோடுவிட்டுமண்ந்தையிவள்
பொய்யாளிருக்குமிழிக்கொங்கைதான்விம்மிப்போற்றுவளே. (௫)

துவளஞ்சமமாவரங்கேசர்வாசத்துவரிதழ்க்குப்
பவளஞ்சமமாவெனவெட்டெழுத்தைப்பகர்ந்திடமெத்
தவளஞ்சமமாகிலும்பட்டவளைப்பசித்திடச்சீ
யவளஞ்சமமாவிதையாணியபறவறிந்திலனே. (௬)

அறியாதபாலனவுத்தானபாதனருந்தவத்தைக்
குறியாதபாலனமன்றரங்கேசகொடுத்தையிவள்
எறியாதபாலனமருந்தவேம்பினிலைமதன்வில்
முறியாதபாலன்பிலவ்வம்படைக்கிவண்மூர்ச்சிப்பளே. (௭)

மூச்சங்கடக்குமுயறவத்தாழிமுரசனைத்தான்
ஏச்சங்கடக்கும்வகையேதுகாணிப்பவக்கிடங்கை
மாச்சங்கடக்கும்பரசர்கள்வீழவன்பாரதஞ்செய்
கோச்சங்கடக்குஞ்சரநீக்கரங்கன்குலாவைவிட்டே. (௮)

வய்யமனந்தமலருந்தியுள்ளேமதனையர்க்
கய்யமனந்தடுமாறுமல்வைத்தரங்காதுதிதான்
செய்யமனந்தமறுதெய்வநண்ணித்திகழ்பதத்தில்
வய்யமறந்தடியேங்கட்கிரங்கிடுவாரிலையே. (௯)

இலநாகவருஞ்சிறுகாலையன்பணிடுமவற்கா
விலநாகவரும்பளிசெய்யரங்கனினிதருள்செய்
திலநாகவருந்தடுபடையாதனமீந்தவன்பே
ரிலநாகவருங்கம்சைக்கும்வாழ்த்தியிறைஞ்சுதற்கே. (௧0)

அஞ்சுகமேர்டியழைத்துடனேயவரங்கனாயி
றைஞ்சுகமோடிபுரிந்தனராயினநீதியன்றே
மிஞ்சுகமோடிபுராரிகயானனவேற்குகன்றீ
தஞ்சுகமோடிரிவாணன்றிண்டோள்கடறியத்தரோ. (௧௧)

அத்தசனத்தனையோகிட்டாமுமறிவரிய
சித்தசனத்தனையென்னரங்கேசனைச்சிந்தைசெய்யும்
பத்தசனத்தனைபோல்வந்தருடருப்பாதநண்ணும்
பித்தசனத்தனையேதுதிசெய்திருபேதைநெஞ்சே. (௧௨)

பேதையராகரப்பாவத்தகப்பட்டபேய்மனமக்
கோதையராகரந்தந்திடுவார்பெருங்கோயிலிற்போய்ச்
சீதையராகரதங்கொள்ளுமோய்மறுதிக்கிலையென்
றோதையராகரஞ்சிப்புடன்பேரின்பத்தொண்டுதற்கே. (௧௩)

ஒண்டமராவதிதேவர்கடாடதரோமொன்கனார்
கண்டமராவதினஞ்சினர்போற்றெங்கதியரங்கர்,
மண்டமராவதிட்டன்னார்துயிறலம்வாழ்ந்திருக்கை
விண்டமராவதிதந்தாலும்யாமதைவேண்டிலமே. (கச)

இல்லாதரிக்குமனைவிசுத்ர்சுற்றமென்னவண்ட
நில்லாதரிக்குந்திருவரங்கேசர்நெடுவரையால்
பல்லாதரிக்கும்படிகாத்தவொன்பவந்துடைப்பர்
அல்லாதரிக்குவலயத்திருந்தென்னடியனுக்கே. (கரு)

கேசவராதவராமரியேயரங்கேசனெனப்
பேசவராதவராயினெனார்நிதிபெற்றவரோர்
வாசவராதவராவயராவரராவெவரும்
மாசவராதவருநரகாழ்வர்மண்வந்துதித்தே. (கசு)

தேனையருந்துங்கருவண்டுகொள்சென்றுசொன்மின்மின்னார்
தானையருந்துமலராசுகமென்றனைச்செய்ததை
வானையருந்தும்பயரும்வழுத்துமரங்கன்முன்னாள்
ஆனையருந்துன்பங்கண்டேவரைக்குடையாக்கினர்க்கே. (கஎ)

ஆக்கந்தருவரடமனநீயவராலயத்தில்
வாக்கந்தருவரிசைபாடப்போதர்வளர்சடையர்
மாக்கந்தருவர்க்கடற்கிறையாதியர்வந்துதொழ
நோக்கந்தருவதைப்போலீவரங்கருன்னுண்மைகண்டே. (கஅ)

மய்யாருமங்கண்மடமாதர்மாயவலையிற்சிக்கி
உய்யாருமங்கன்புடன்றொழுதாலவருய்யச்செம்பொன்
ஐய்யாருமங்கணமாமரங்கேசர்நயந்துதஞ்சொத்
தய்யாருமங்களமாயடைவீரொன்றுதாஞ்சொல்வரே. (ககூ)

தானவரங்கமழியப்புடைத்துத்தமரிலரி
தானவரங்கம்பெருமையடையத்தருவரினி
தானவரங்கத்துயில்வோர்திருவடிதஞ்சமென்றால்
தானவரங்கணெடுத்தருள்செய்வர்தனிமனனே. (உ0)

மனத்தருமந்தமயிலினங்காள்சென்றுவாழ்த்தியெங்கள்
இனத்தருமந்தமதனூற்றுடித்தனரொன்றுவெண்கூட்
டனத்தருமந்தகனையுதைத்தாருமடிதொழுந்தே
வனத்தருமந்தன்வடிவாமரங்கன்முன்வாசிமினே. (உக)

மின்னார்களஞ்சநடைக்குநகைப்புக்குமெல்லிதழ்க்கும்
அன்னார்களஞ்சங்கையொத்ததற்குஞ்செண்டருங்கொங்கைக்கும்
பின்னார்களஞ்சம்பகத்தார்க்குழல்பெருங்கண்கட்குமென்
அன்னார்களஞ்சவரத்தருவாயரங்கேசவின்றே. (உஉ)

ஏசங்கரியன்பதுமனரனிமையோர்களெல்லாம்
பேசங்கரியமறுதெய்வமின்றிப்பிரியமுடன்
வாசங்கரியநிறத்தானடியென்றுவாழ்த்தப்பவ
பாசங்கரியவருள்வானரங்கனைப்பாடுநெஞ்சே. (உங)

நெஞ்சாமலைத்துமடவார்கலவிநெருக்கின்மனப்
பஞ்சாமலைத்திடனுள்ளேக்கமுற்றுப்பதறிடவங்
கஞ்சாமலைத்துன்பக்காளாய்நரகுறுவாய்வணங்க
நஞ்சாமலைத்திடைப்பெம்மானரங்கனைநாடிவந்தே. (உச)

வந்துவிணங்கரியைத்தஞ்சமாமனனேயவரு
வந்துவணங்கரியானனன்சேந்தன்வல்லேற்றக்கரு
டந்துவணங்கரியார்திருத்தாளுந்தனக்கிருப்பி
டந்துவணங்கரிதாம்பதமீவாரரங்கரையே. (உரு)

கரைவாய்க்கடங்காதலைவெள்ளமோங்கிக்கனகமுற்று
விரைவாய்க்கடங்காதலைமீறிடுங்காவிரியரங்கத்
தரைவாய்க்கடங்காதலையோதியிந்தச்சரண்டஞ்சமென்
றிரைவாய்க்கடங்காதலைநீக்கநெஞ்சேவிறைஞ்சிவந்தே. (உசு)

வந்தவிராதவரங்கதிர்மின்மினிமானும்வைகுந்
தந்தவிராதவரீவார்வணங்கிற்சதித்தபவ
பந்தவிராதவதஞ்செயரங்கர்பல்லூழிகட்கும்
முந்தவிராதவரோவெனவாய்ந்துறையிட்டுளே. (உஎ)

முறையாவனத்தத்தையுண்டாக்கமாரன்முழுமிடற்றுக்
கறையாவனத்தத்தைமாற்றிவைத்தாயெங்கமலைபுவிக்
கிறையாவனத்தத்தையேந்தரங்கேசவென்றேற்றவர்பால்
துறையாவனத்தத்தைகாள்சொல்லுவீரொன்றுயரங்களே. (உஅ)

துயரங்கடுஞ்சவவரங்குணங்களைச்சொல்லுமும்பர்
அயரங்கடுஞ்சடையார்க்கருள்வாரரங்கத்தினுட்போய்
உயரங்கடுஞ்சமன்பாலுளதென்றஞ்சியோதலர்தம்
பியரங்கடுன்சம்பகத்தார்க்கழற்காட்பெயர்பட்டுமே. (உகூ)

பட்டவருத்தங்களையாதினம்பஞ்சபாணன்றன்னூற்
பட்டவருத்தங்களையாதிவைத்தகப்பட்டுழல்வீர்
பட்டவருத்தங்களையாதிநிம்பாரதமுடிக்கப்
பட்டவருத்தங்களையாதிரங்கன்பதிதொழுமே. (௩௦)

பதியாதவங்கதிர்கண்டோடரங்கம்பணிவதுசம்
மதியாதவங்கதிகெட்டுமின்னார்மயல்கொள்வர்தலை
விதியாதவங்கதிப்பில்லாமையாசெல்லவைதரணி
நதியாதவங்கதில்வீழ்வரங்கேமனறுக்குவனே. (௩க)

நறுஞ்சந்தனந்தந்தவள்கூனிமிர்த்திநடையனஞ்செட்
பிறுஞ்சந்தனந்தந்தமோமுல்லையந்தம்பெருக்கனல்போல்
மறுஞ்சந்தனந்தந்தனம்பள்ளியான்வந்தபேய்ச்சிமுலை
உறுஞ்சந்தனந்தந்தனஞ்சேயரங்கனையோதுநெஞ்சே. (௩உ)

நெஞ்சிப்படிக்கேவலந்துயர்கொண்டுநெருக்கமுமுற்
றஞ்சிப்படிக்கேவலம்வந்துசோர்ந்தரங்காவுனதி
ரஞ்சிப்படிக்கேவலங்குசெய்துய்ந்திடநாடினன்போய்க்
கெஞ்சிப்படிக்கேவலங்குறைதெய்வத்தைக்கேட்டருளே. (௩௩)

கேட்டக்கமோனிகட்கேவானலமன்றிக்கேதங்கொடான்
பூட்டக்கமோநிகரில்லாவரங்கத்தன்பொன்னடிவிட்
டோட்டக்கமோனிகடேன்கூடென்றுசையுற்றுய்ப்பகடார்
வாட்டக்கமோநிகழ்பாவிநெஞ்சேயெத்தன்மைமதியே. (௩௪)

மெய்யமரங்கனையார்கண்வலைசிக்கிமாய்வதுவிட்
டுய்யமரங்கனைவாரிதிதாம்பட்டுறிஞ்சுகணை
எய்யமரங்கனைவிற்றடிவாணந்தையாழியனைக்
கய்யமரங்கனைவோருஞ்செய்வீரிருகாற்கட்டியே. (௩௫)

ஏமதவிந்தவிறுமாப்பியாவுமினிநடவா
தாமதவிந்தவுனதாசுகங்களுந்தானைகளும்
போமதவிந்தமுகத்தானரங்கன்புணர்வைமன
சாமதவிந்தலையேனட்நீயென்னதான்செய்வையே. (௩௬)

செய்யனஞ்சஞ்சரிதென்னரங்கேசன்றிருப்பணிசெய்
துய்யனஞ்சஞ்சரியேவல்செய்தோடித்திரிதலிக்காம்
மையனஞ்சஞ்சரிதாம்பவழுட்டைமறைவித்தயன்
அய்யனஞ்சஞ்சரியாக்குதலெப்படியாமனனே. (௩௭)

ஆமனனஞ்சடைவானவனிந்திரனுதியும்பர்
தாமனனஞ்சடைவாய்க்ககதத்துதிதான்செய்தெய்வம்
பேமனனஞ்சடைவாயரவிற்றுயில்பேணரங்கப்
பூமனனஞ்சடைவாய்செய்ததீவினைபோக்குகைக்கே. (௩௮)

போக்கங்கருவந்தனமாதராசைபுவிக்கழல்பல்
ஆக்கங்கருவந்தனமார்ச்சிதப்பவமாந்துயர்மாத்
தேக்கங்கருவந்தனமாயற்கருள்செய்தறிவுண்
டாக்கங்கருவந்தனமாவரங்கவென்றுசித்தற்கே. (௩௯)

தற்காலநந்தம்பயிர்க்குமழைபெய்யத்தாவமென்செய்
தற்காலனந்தனமாரரங்கேசன்றனதருள்செய்
தற்காலநந்தமபாராதத்தீவினைதத்நிலைவற்
றற்காலனந்தவழிபோயெனசாஞ்சலிப்பவரோ. (௪௰)

சலியாதவர்க்குவில்வளைத்தெய்சரமாரிகட்கஞ்
சலியாதவரிக்குளிர்ந்தகண்மாதென்றனக்கினிமா
பலியாதவரிக்குவித்தாரரங்கர்பதத்துளவம்
பலியாதவரிக்குத்தான்பிணக்கோவென்றுபாரணங்கே. (௪௧)

பாராருமங்கன்புடன்றிக்குநோக்கிப்பணியுமலைக்
காராருமங்கன்பதியாமரங்கங்கயந்தவிழி
பேராருமங்கனமாம்பத்தகோட்டிபெறுதலில்லா
தாராருமங்கணந்நாரகத்தாழ்ந்துதவிப்பரன்றே. (௪௨)

தவித்தலையும்பரடிதொழுதேத்தத்தமரடைதத்
தவித்தலையும்பரவைவிட்டரக்கன்றசமெனவுற்
பவித்தலையும்பரவியகைந்நாலைந்தும்பாரினில்வீழ்ப்
பவித்தலையும்பரமாவரங்காசெய்தைபாரமன்றே. (௪௩)

பாரத்தனங்களைக்கச்சிட்டிறுக்கிப்பதுக்கவம்பஞ்
சாரத்தனங்களைந்தேவிட்டுத்தாக்கித்தகர்த்திக்குவில்
வீரத்தனங்களைத்தேர்குடையேவிவெதுப்பிச்சுடும்
கோரத்தனங்களைந்தாற்றரங்காநின்குளிர்கணிட்டே. (௪௪)

இட்டவராகத்திலக்குமிதன்னையிரணியற்கஞ்
சிட்டவராகத்திரிகின்றதேவரிடர்தொலைப்பப்
பொட்டவராகத்தின்மீதரியானவர்பொன்னரங்கம்
விட்டவராகத்திசைந்துபின்றேம்புவர்வெஞ்சமற்கே. (௪௫)

வெஞ்சக்கரத்தனைப்பின்னைமணாளனைவேதனைக்கோள்
அஞ்சக்கரத்தனைத்திரரங்கேசனையாதரித்துக்
கெஞ்சக்கரத்தனைவோர்களுநீங்கள்செய்கேட்டகங்கள்
துஞ்சக்கரத்தனைப்போல்வைத்துக்காப்பன்சுலபமிதே. (௪௬)

இதுவம்பரமபதமென்றரங்கத்திருமனமற்
றதுவம்பரமர்ந்திருக்கின்றதாந்தொல்லருநரகம்
விதுவம்பரமத்தியன்றனஞரியர்வெங்குழிகண்
புதுவம்பரமக்கொடுவினைநீக்கிநற்புத்திகொண்டே. (௪௭)

கொண்டவனந்தங்குலதெய்வமென்றெனுங்கோதையர்போல்
கண்டவனந்தனிடந்துயில்வோயரங்காவென்நஞ்
சுண்டவனந்தண்மலரோன்புரந்தரனும்பர்துயர்
விண்டவனந்தவருடருவான்சென்றுவேண்டுநெஞ்சே. (௪௮)

வேண்டத்தனகனகவத்துவாகனமெய்ப்பதத்துக்
காண்டத்தனகமகிழ்ந்தருள்வானிரங்காதவளாச்

சேண்டத்தனகனரங்கன்பணிவிட்டுச்செய்பவத்தைத்
தாண்டத்தனகரிழுத்துதைப்பானச்சமன்கடிந்தே. (௪௯)

சமனுகத்தந்தவுயிர்க்குயிராயினைதாப்பொருவஞ்
சமனுகத்தந்தமுறுவித்தையாங்குச்சதிசெய்தகஞ்
சமனுகத்தந்தரமாயுதைதாமரைத்தாளிணைதஞ்
சமனுகத்தந்தவினைமாற்றரங்கவிந்தக்கணமே. (௫௦)

தக்கணநாகத்தினுலிலையநோக்கிடுஞ்சாதகம்போல்
எக்கணநாகத்திநோக்கிநின்றேநின்னிணையடியை
மூக்கணநாகத்திற்சேர்துன்பந்தீர்சகல்மோகனதீ
ரக்கணநாகத்தின்மீதரங்காதந்தருளுவையே. (௫௧)

அருமாதவரந்தரர்கோன்குளக்கணரஞ்சர்மலர்த்
திருமாதவரந்தப்பொன்னடிக்கேதிரிவாருதித்து
வருமாதவரந்தத்தேயுகண்டோடுமதிலரங்கக்
கருமாதவரந்தத்தெற்குத்தந்தேகதிகாட்டுவரே. (௫௨)

காட்டக்கனவின்பொருள்கண்டதுபோற்கடுவினையுள்
ஊட்டக்கனவிழிவாஞ்சன்மநீக்கவுபாயநினைக்
கூட்டக்கனவிர்மலரோனிடையனென்கோனரங்கன்
கேட்டக்கனவிற்றுதியோகர்சிந்தைக்கிளர்பதமே. (௫௩)

கிளைக்கும்பலசத்திருக்கணிறையுங்கிமியுடலுங்
களைக்கும்பலசத்தென்வந்தகன்றமர்கட்டுவர்காண்ண
அளைக்கும்பலசத்ததரந்திறந்தன்றகல்புவிக்கும்
வளைக்கும்பலசக்குவர்சீரரங்கமறந்தவரே. (௫௪)

தவத்தளவாகுங்குவலயத்தோர்செல்வந்தானரங்கர்
துவத்தளவாகுங்குளிர்கண்ணருள்பெறத்துன்னுவிரேல்
பவத்தளவாகுங்குழலார்மயல்பசனத்துநர
கொவத்தளவாகுங்குழந்தையென்றேதந்துவப்பரன்றே. (௫௫)

உவப்பாயனந்தமுலகங்களையுண்டுமிழ்ந்தளந்து
தவப்பாயனந்தன்முகிழ்க்கண்வளர்த்திசெய்தாலரங்கா
பவப்பாயநந்தம்வினைபோய்ப்பரமபதத்தடியார்
துவப்பாயநந்தல்டிசேர்ப்பவரெவர்சொல்லய்யனே. (௫௬)

சொன்மானதங்கடநாயேற்குக்காந்தந்தொடருமயத்
தின்மானதங்கடந்தாவடிசேர்வதில்லாதுவஞ்சப்
பொன்மானதங்கடமோதரங்கேசரும்மிற்புறத்தோர்
நன்மானதங்கடன்னைமைகாட்டினும்பற்றினனிலத்தே. (ருஎ)

நானேரிலக்கணங்காணேனிலக்கியநற்பழக்கம்
ஆனேரிலக்கணஞ்சென்றறியேனரங்காவுனைத்தான்
வானேரிலக்கணநல்விதியேத்தவழுத்துமென்சொற்
றானேரிலக்கணன்போதலைப்போன்றதுதாங்கொள்வையே. (ருஅ)

தாங்கந்தனந்தந்தராதலத்தேவந்துதையன்மயற்
காங்கந்தனந்தந்தனந்தானையீதற்கலைவதையும்
வீங்கந்தனந்தந்தவாய்மாதர்வேட்கைவிரும்பரங்க
வாங்கந்தனந்தந்தயோனியிற்றோன்றவளைந்ததுமே. (ருகூ)

வளையாழிமாலையளகந்துகிலிவைமாமனபூ
வளையாழிமாலையரங்கேசதாவென்றுவாழ்த்தவென்பெண்
வளையாழிமாலைப்பினைதொண்டைமானுக்குமற்றதைக்கு
வளையாழிமாலையினிலங்கிசேய்க்கும்வழங்கினனே. (சூ0)

வழங்கத்தனந்தானியங்கோமணந்துகின்மாவிலெந்தம்
பழங்கத்தனந்தானரங்கேசனைப்பண்டசோதைமுன்ற
வழங்சத்தனந்தாவெனச்சொல்வமற்றமிடியணங்கைத் [டே
தொழங்கத்தனந்தாய்த் திருவன்றிக்கேட்டையைச் சொல்வதுண்

உண்டாலனம்பாற்சுதைகண்டுசீனியுவர்க்குமதன்
விண்டாலனம்பாற்கனையேவிவந்துயிர்வீழ்த்துமுன்னம்
கண்டாலனம்பார்பதுமத்தனேதாங்கத்தாடி
வண்டாலனம்பாய்துழாய்வாங்கிவாசென்மடமங்கையே. (சூஉ)

மடங்காதலைக்கண்மலராதுகாணவணங்கதின்பேர்
தடங்காதலைக்கமணியாரவத்துத்தவிர்த்தவற்கன்
றடங்காதலைக்கடலாம்பவநீக்கியளித்தபதத்
திடங்காதலைக்கத்தடியேற்கரங்கவின்றீந்தருளே. (சூங)

ஈந்தவருந்தியயனுலுலகமிவையுணவங்
காந்தவருந்திருவைகுந்தமேன்கடிக்காதடியேற்

கேந்தவருந்திவியுள்ளோருமேத்தரங்கேசனென்னும்
சார்ந்தவருந்திலனுபற்றுவப்பொடுதோய்ந்திலனே. (௬௪)

தாழாதனந்தனைப்பாராதுகங்கண்சரிதஞ்செவி
சூழாதனந்தனைச்சேயாமரங்கனற்றொல்புகழ்நா
வாழாதனந்தனைக்கூப்பாவிணைக்கைமறந்துகுவில்
பாழாதனந்தனைத்தேடானெமனுக்கோபராங்கதியே. (௬௫)

ஆங்கதிக்கேதத்தைக்கொள்வேழங்கூப்பிட்டலறவரார்
தாங்கதிக்கேதத்தையாவாதியென்னவந்தக்கணநின்
றீங்கதிக்கேதத்தைத்தீர்த்தொன்றருடென்னரங்கர்நிற்ப
நாங்கதிக்கேதத்தைவத்தாலென்னென்பருண்ணுணமற்றே. (௬௬)

நாணமர்க்கேகணக்கொப்பித்தியாமதனுருடன்செய்
வீணமர்க்கேகணநீங்காநரகத்துவீழ்தவின்றிச்
சேணமர்க்கேகனண்பல்லான்பொன்னுகனைச்செற்றரங்க
கேணமர்க்கேகணன்பாலருள்செய்தடிக்கீழ்வைப்பையே. (௬௭)

வைப்பாவனத்தந்திகிரிகதைகொளமற்றைக்கையிக்
குப்பாவனத்தந்திட்டென்வினைமாற்றுகொடுவிடங்கர்
தப்பாவனத்தந்திபாஞ்சாலிகாக்கலைமைந்தற்குமரங்
கப்பாவனத்தந்திருப்பிலையோவந்தபயந்தந்தே. (௬௮)

தந்தக்கரனூர்பதுமனிடையான்றமர்நினைக்க
வந்தக்கரனுவிரண்டானருள்வல்லரங்கத்திற்போய்
முந்தக்கரனுருயிர்வீழ்த்தினேயெனமுன்பஞ்சலென்
றந்தக்கரனுன்பெறவீந்திலனென்னரும்பவமே. (௬௯)

அருந்தலையாயிரமாயிரந்தாள்புயமாயிரங்கண்
அருந்தலையாயிரஞ்சிப்பாமுனக்கிவ்வகிலமருந்
அருந்தலையாயிரங்குங்கடலே துயிலண்டத்தர்பல்
அருந்தலையாயிரந்தாரரங்காநின்னையாரொப்பரே. (௭0)

ஆரத்தவங்கம்புவிவேள்விசெய்தலைந்தாடியிருப்
போரத்தவங்கம்புகழ்ப்பெற்றியாதெனிற்பொன்னுலகத்
தாரத்தவங்கம்புகுந்துடன்மாற்றன்றித்தண்ணரங்கத்
தூரத்தவங்கம்புயல்போனுநின்பெயிற்றேய்ந்திலரே. (௭௧)

தோந்தந்திதாவென்றராப்பணத்தாடுந் துணையடிதத்,
தாந்தந்திதாவென்னவோடரங்காநின்னைச்சார்வதெந்நாள்
தீந்தந்திதாவெண்மதிநுதலார்மயற்றீயிலிடை
யாந்தந்திதாவெற்பிதாதனமென்றலையானுய்வுந்தே. (எ௨)

வந்தந்தமாவலிவேள்வியின்மூவடிமண்டரவ
ளந்தந்தமாவலிவ்வண்டத்தப்பாலடிபாதலமாம்
உந்தந்தமாவலிலாய்மாதர்பாறயிருண்டுரற்கட்
டுந்தந்தமாவலிகொள்ளரங்கேசனென்னேவியப்பே. (எ௩)

ஓவிருந்தேவடியாவரங்காகனியோர்சவரி
ஈவிருந்தேவடியாரமுதாக்கொளிறைவவென்றன்
நாவிருந்தேவடியாகக்கவிக்குநயந்ததுபோல்
பூவிருந்தேவடியாளாக்கித்தீரொல்லைப்புன்பிறப்பே. (எ௪)

புன்னாகத்ததிர்ந்தோர்கோடிகற்பம்புரண்டும்பற்று
தென்னாகத்ததிதீமைக்கியான்செய்வதேதரங்கா
பொன்னாகத்ததிருக்காதலாவென்றுபோற்றவிடர்
பின்னாகத்ததிக்கய்யவந்தீந்திடுநின்பேரின்பமே. (எ௫)

பேரோதநந்தங்கணக்கிலடிகீழ்ப்பெருத்தமுடித்
தாரோதநந்தனன்மேலிடமாந்திக்கைத்தாண்டுங்கைகள்
காரோதநந்தரங்கேசன்சுரூபத்தைக்கண்டுபணிப்
பாரோதநந்தனியாதிற்றலாரும்பயமற்றுமே. (எ௬)

அற்றவரார்கொலவனிமின்னார்பொருளாசையும்மைச்
சுற்றவரார்கொடும்பாவனொன்போன்றவர்தொல்லரங்கர்
சொற்றவரார்கொடுப்பார்பதமென்னத்துணியர்வினைப்
பற்றவரார்கொடுவாட்கைநமற்கென்னபண்ணுவரோ. (எஎ)

பண்ணும்படிக்குளரங்கமுன்பாடியிற்பாலென்ன
எண்ணும்படிக்குநடத்துன்றன்மாயத்தையானறியேன்
கண்ணும்படிக்குளக்கோட்டுங்கொளான்கன்றுகாளையராய்
உண்ணும்படிக்குகைக்கேமுடியாதின்னமுற்றயற்கே. (எஅ)

அயமுண்டகந்தனையர்க்கண்டதாயன்னதாயடியேன்
உயமுண்டகத்தனையொத்தநின்சேவடிக்கொன்றலெந்நாள்

பய்முண்டகர்த்தனையந்துறந்தோடப்பண்ணீசற்கதி
சயமுண்டகந்தனைத்தீர்பெருங்கோயினந்தங்கத்தனே. (எகூ)

தங்கவிடமானமுஞ்சந்திரவாவிதடம்புனைமா
தங்கவிமானமுங்கீசம்பரியிரதம்மகிமா
தங்கவிமானமுன்கோயிலைவாயிலைந்தாவழுத்தெந்
தங்கவிமானமுண்டாக்கரங்காபொற்சரணத்தனே. (அ0)

நத்தந்தரித்திரவும்பகல்போலும்பொன்னுடர்கைசோ
ரத்தந்தரித்திரமாந்தருபூவிடைநாட்டியரங்
கத்தந்தரித்திறஞ்சேவிக்கக்கண்வளர்ந்தாயடியேன்
சித்தந்தரித்திரஞ்சேராவகையருள்செய்ததியே. (அக)

ததியோதனந்தனுடனுபர்பாலர்தரக்கொடுத்துண்
டதியோதனந்தன்குழந்தையென்றுனிவ்வகிலந்தந்த
விதியோதனந்தனன்பாற்றுயில்வைகுந்தம்வீற்றிருக்கும்
பதியோதனந்தம்பருவாக்கரங்கன்பணித்திருந்தே. (அஉ)

பணித்தடங்காதன்விரிஞ்சன்வலாரிபணவனந்தன்
கணித்தடங்காதநின்பண்படியேன்கண்டதோசருமஞ்
சணித்தடங்காதன்கிளையோடரக்கனைச்சாய்த்தரங்கா
எணித்தடங்காதன்பினுலகம்யாதென்றியம்புவனே. (அங)

அம்புகளைந்துமொருதொடையாவிட்டடிக்குமதன்
வம்புகளைந்துவிடச்சொல்லெனவென்மனத்தைவிட்டேன்
பம்புகளைந்துளவத்தாரரங்கர்பைம்மார்பணிசந்
தம்புகளைந்துதிரும்பிவராததிற்சார்ந்ததுவே. (அச)

சாந்தாமதனயனத்தாவரங்கசரோருகமா
தாந்தாமதனயனத்தாகயானின்னைச்சார்தற்கருள்
ஏந்தாமதனயனத்தாதரித்திலையேனரகாம்
தேந்தாமதனயனத்தாபல்யோனிசெனித்துவந்தே. (அரு)

செனிக்கயனுதியிற்றுனெழுதாவிடிற்றேர்த்திபதன்
கனிக்கயனுதியிற்றுதிநின்பேர்சொலக்கண்டருள்செய்
தனிக்கயனுதியிற்றுமெழுகானதுன்றுள்வணங்காத்
துனிக்கயனுதியிற்றுயரங்காவருள்சொல்லெனக்கே. (அசு)

எனக்கந்தத்தேவனரங்கன்றிருவடியேன்வருமோ
கனக்கந்தத்தேவன்றனமாதராசைகலக்கநமன்
றனக்கந்தத்தேவந்துதைப்பானெனல்போய்ச்சதித்தபவத்
தினக்கந்தத்தேவந்துறச்செயுதர்மஞ்சிந்தித்திலனே. (௮௭)

இத்திக்குநாமசுவைதைக்கண்டுசீனிதெவிட்டவுநீ
வித்திக்குநாமாய்ந்தறிந்துகொண்டோமந்தவேழத்தினால்
எத்திக்குநாமபலதெங்கஞ்சோலைமொய்த்தேய்ந்தரங்கா
சத்திக்குநாமாறிடாதருள்வைகுந்தந்தெமக்கே. (௮௮)

தந்தஞ்சனனப்பிணிக்கோர்மருந்தெனத்தாள்பற்றிவந்
தந்தஞ்சனனற்குணம்போற்றியுய்யத்தகரங்கநீ
வந்தஞ்சனனயனந்தருவோமெனவாழ்த்திக்கண்சி
வந்தஞ்சனனரன்போற்றுதிதான்செய்தமாபணிந்தே. (௮௯)

பணியாரனஞ்சன்குலிசன்முதலோர்பரவத்திருப்
பணியாரனஞ்சக்கராயூணரங்கன்பதத்துவந்தி
பணியாரனஞ்சனவன்காண்டிருக்கோயில்பற்றியவன்
பணியாரனஞ்சமதியோடுசெப்துங்கண்பார்த்திலனே. (௯௦)

பாத்திலதாகருக்கோலைமலர்திபல்லீக்கள்வந்தைக்
கோத்திலதாகருசித்தாழ்வதுபோற்குழம்பெனுஞ்ழ
மாத்திலதாகருவண்ணவரங்கத்தம்மாபிறவி
நீத்திலதாகருணைக்கழகுன்றுட்செவித்தனனே. (௯௧)

தனந்தந்தனம்புவனமாதர்கேடென்றுதள்ளித்துதி
தினந்தந்தனம்புவிதோன்றலைமாற்றித்திருவரங்கா
முனந்தந்தனம்புத்தியில்லானசாமிளன்முத்திபெற்றான்
அனந்தந்தனம்புதலையிட்டுவந்தேனையாட்கொள்வையே. (௯௨)

ஆளப்பதங்களைந்தென்னரும்பாவமகற்றநல்ல
நாளப்பதங்களைவாயாவரங்கநற்சார்ங்கவல்வில்
ஆளப்பதங்களைப்பெற்றவைகுந்தத்தடியவர்தந்
தாளப்பதங்களைந்துய்யவந்தேனுன்சரணம்பியே. (௯௩)

நம்பரமாவரதாவரங்காநன்னலினைத்துமா
நம்பரமாவரதாவரங்காநள்ளிருளகத்துக்

கம்பரமாவரதாவரங்கா நண்ணரியயன்றி
கம்பரமாவரதாவரங்கா நடைகொண்டவனே. (௯௪)

காண்டவனூரியகாரிபகாரிகஞ்சாரிபுவி
சேண்டவனூரியனென்னரங்கேசன்கிளிவளைவேல்
நீண்டவனூரியற்கண்டனஞ்சொல்லார்நெருக்கறவவ்
வாண்டவனூரியற்றுளையடைக்கலமாநிற்பனே. (௯௫)

ஆனிப்பனேவிச்சன்னமரணத்தகத்தகப்பட்
டேனிப்பனேவினம்போகியற்றேனையெனக்கத்தினி
தானிப்பனேவிமலாவரங்காவெனச்சாற்றினுனக்
கேனிப்பனேவிழுங்காதிலெந்தாயும்பரோத்தைவிட்டே. (௯௬)

விட்டவனத்தனை தானத்தவநெறிவேள்விகன்மம்
சுட்டவனத்தனைதந்தைசகோதரர்சுற்றந்தள்ளிப்
பொட்டவனத்தனையென்னரங்கேசனைப்போற்றிவினைப்
பட்டவனத்தனந்தாதிவைகுந்தத்தைப்பற்றுவனே. (௯௭)

பற்றவராதவராயடியோங்கள்பவபலத்தைப்
பெற்றவராதவராகினுநீயருள்பேர்மறைகள்
நற்றவராதவர்சேணியர்வாணியர்நாகணியர்
சொற்றவருதவனம்போற்றரங்கந்துயின்றவனே. (௯௮)

துயிலாதனம்பணிபூமாதர்வேட்கைதுறந்தடிக்கோட்
டியிலாதனம்பணியாமுனக்கேதொண்டியற்றிடயான்
கயிலாதனம்பணிருக்காதிவேதன்கரியனும்பர்
பொயிலாதநம்பணிந்தோதரங்காநின்புகலருளே. (௯௯)

புகலேதனந்தமதிசிவினைக்குப்புரடனுவம்
புகலேதனந்தஞ்சனனுதித்துஞ்பம்பொடிக்கநனம்
புகலேதனந்தனுடல்வாழ்தினாப்பொன்னிபூண்டரங்கா
புகலேதனந்தனியாவருணீடிருப்பொன்னடியே. (௧௦௦)

கோயிலந்தாதி - முற்றிற்று.

பாஷண்டதிமிரபாஸ்கராயநம:
ஸ்ரீமதேநிகமாந்தமஹாகுரவேநம:
ஸ்ரீமாதவமாமுனிகள் மலரடிகள்வாழ்க.